(6) ஒழுங்குப் பிரச்சினை.

பாளையங்கோட்டையில் நடைபெற்ற கால்நடை கண்காட்சி விழா குறித்து.

திரு. பொ. விஜயராகவன்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். நெல்லை—குமரி மாவட்டத்தின் கால்நடைக் கண்காட்சி அரசு விழாவாக 29—3—1979 அன்று பாளையங்கோட்டையிலே நடைபெற்றிருக்கிறது. இதில் முதல் அமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும் கலந்து கொண்டிருக்கிறார்கள் . . .

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதிலே குறுக்கிட விரும்பவில்லை. நம்முடைய அலுவல் ஆய்வுக் குழுவிலே குறிப்பாக, பிரச்சினைகள் முடிந்தவுடன் மானியக் கோரிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்றும், ஏதாவது விவரம் கேட்பதானால், கட்சியின் தலைவர்கள் கேட்க வேண்டுமே தவிர, மற்றவர்கள் கேட்கக் கூடாது என்றும் தீர்மானத்திருக்கிறோம். அதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் விஜயராகவன் அவர்கள் கூறியது போல் நெல்லை—குமரி மாவட்டங்களின் சார்பில் இந்த விழா நடைபெற்றிருக்கிறது. அதில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும், மற்றும் பல அமைச்சர்களும் கலந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் எதிர்க் கட்சித் தலைவர்களுக்கு உரிய மரியாதையை காட்டியதற்காக, மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்; வரவேற்கிறேன். ஆனால், இந்த அரசு, இந்த விழாவிற்கு எனக்குக்கூட அழைப்பு அனுப்பவில்லை. இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் சென்னையில்தான் இருக்கிறார்கள் என்பது இந்த அரசுக்குத் தெரியும்; இந்தத் துறையைச் சார்ந்தவர்களுக்கும் தெரியும். இதிலே பணியாற்றுகின்றவர்களுக்கு நன்கு தெரியும். இருந்தாலும் கூட, இங்கே சென்னையிலேயும் எனக்கு அழைப்பு அனுப்பவில்லை; ஊரிலேயும் எனக்கு அழைப்பு அனுப்பியதாகத் தெரியவில்லை; அது மட்டுமல்ல, இந்த விழாவிற்கு . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிரச்சினையை என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தாலே போதும்; அதைநான் விசாரிக்கலாம். இதற்காக நேரத்தை வீணாக்கவேண்டாம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, விழாவில் கலந்து கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு ஜேம்ஸ் அவர்களுடைய விருப்பத்திற்கு நான் உண்மையிலேயே நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அழைப்பு அனுப்பப்படாதது பற்றி அரசு நிச்சயமாகக் கவனிக்கும்